**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 10/2025**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய சதீஷ் **PW2.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 11.09.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சதீஷ்** | | | |
| Father /Husband Name | : | **சீமான்** | Court | : | |
| Village | : | **கிராம நிர்வாக அலுவலர், திருவிடைக்கழி** | Taluk | : | |
| Calling | : | | | | |
| Age | : | 30/2025 | | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது திருவிடைக்கழி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பழைய புல எண். 297/3 பா, புதிய புல எண். 297/30 இதற்கான பட்டா எண் என்ன என்றால் 485 ஆகும். அது வசந்தி என்பவர் பெயரில் உள்ளது. பட்டா எண். 485 ற்கான சிட்டா மற்றும் அடங்கல் பதிவேட்டின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அந்த **சிட்டா மற்றும் அடங்கல் சாசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**